


நீலகிரி மாவட்டத்தில் நடைபெற்று வரும் SIR தீவிர வாக்காளர் பட்டியல் திருத்த பணிகள் குறித்த கலந்தாய்வு கூட்டம், மாவட்ட திமுக அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலயத்தில் மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜு தலைமையில் நடைபெற்றது. இதில் கழக துணை பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி., ஆலோசனைகளை வழங்கினார். உடன் கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் பா.மு.முபாரக், தேர்தல் பணி செயலாளர் அரசு கொறடா கா.ராமசந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



புதுக்கோட்டை மாவட்டத்திற்கு 14–வது ஆடவர் ஹாக்கி இளையோர் உலகக்கோப்பை போட்டிக்கான வெற்றிக் கோப்பை சுற்றுப்பயணம் வருகை தந்துள்ளதையொட்டி, மாவட்ட விளையாட்டுத்துறையின் சார்பில் ஹாக்கி உலகக்கோப்பையானது மாவட்ட ஆட்சியரகத்தில் இருந்து எடுத்துவரப்பட்டு, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் கருணாநிதி மாவட்ட விளையாட்டரங்கில் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி முன்னிலையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா தலைமையில் நேற்று முன்தினம் (17.11.2025) காட்சிப்படுத்தப்பட்டது. உடன் மரு.வை.முத்துராஜா, எம்.எம்.அப்துல்லா, கூ.சண்முகம், து.செந்தில்குமார் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### மதினாவில் பேருந்து விபத்து:

# இந்தியர்கள் உயிரிழந்தது குறித்து அதிர்ச்சிக்குள்ளானேன்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, நவ. 19–**

**“மதினாவில் நிகழ்ந்த பேருந்து விபத்தில் இந்தியர்கள் உயிரிழந்த செய்தியறிந்து மிகவும் அதிர்ச்சிக்குள்ளானேன்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.**

மதினாவில் நிகழ்ந்த துயரமான பேருந்து விபத்தில் இந்தியாவில் இருந்து உம்ரா புனிதப்பயணம் சென்றிருந்த பலர் உயிரிழந்த சம்பவம் குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு

மதினாவில் நிகழ்ந்த துயரமான பேருந்து விபத்தில் சிக்கி, இந்தியாவில் இருந்து உம்ரா புனிதப்பயணம் சென்றிருந்த பலர் உயிரிழந்த செய்தியறிந்து மிகவும் அதிர்ச்சிக்குள்ளா னேன்.

உற்றாரை இழந்து தவிக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு இத்துயர்மிகு வேளையில் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். காயமடைந்த நபர் முழுமையான மருத்துவ சிகிச்சை பெற்று விரைவில் நலமடைய விழைகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைத் தளப் பதிவில் கூறியுள்ளார்.

### தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தின்

# அரிய ஆவணங்களை ஆய்வு செய்வோரிடமிருந்து - விண்ணப்பங்கள்!


## அமைச்சர் கோவி.செழியன் வேண்டுகோள்!

*சேலம், நவ. 19-*

*தமிழ் சமூகத்தின் பெருமைமிகு வரலாற்றினை வெளிகொண்டு வரும் வகையில் தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தின் அரிய ஆவணங்களை ஆராய்ந்து ஆய்வு மேற்கொள்ள ஆராய்ச்சியாளர்களிடமிருந்து 28.11.2025 வரை விண்ணப்பங்கள் பெறப்படும் - என்று உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.*

*இது குறித்து வெளியாள செய்திக்குறிப்பு வருமாறு:-*

*தமிழ் சமூகத்தின் பெருமைமிகு வரலாற்றினை அனைவரும் அறிந்து கொள்ள தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தின் அரிய வரலாற்று ஆவணங்களை மாதம் ரூ.50,000 உதவித் தொகையுடன் ஆராய்ந்து ஆய்வு மேற்கொள்ள ஆராய்ச்சியாளர்கள் தேவை என உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தெரிவித்துள்ளார்.*



*இது குறித்து உயர்கல்வித் துறை அமைச்சர் தெரிவித்துள்ளதாவது:*

*பழமைமிகு நமது தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தில் மூன்று நூற்றாண்டுகளுக்கு முந்தைய அரசுத் துறை ஆவணங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. “மெட்ராஸ் ரெக்கார்ட் ஆபீஸ்” என்ற பெயரில் அழைக்கப்பட்ட இக்காப்பகம் 1909 முதல் தற்போதுள்ள ஆவணக் காப்பகக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது.*

*1633ஆம் ஆண்டு முதலான புத்தகங்களும், 1670ஆம் ஆண்டு முதலான பழமையான ஆவணங்களும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டின் வரலாற்றினை அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கில் 1973ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சி மன்றம் மாறிவரும் காலத்திற்கேற்ப மீளுருவாக்கம் செய்யப்படும் என்றும், ஆண்டுதோறும் 10 முதல் 15 ஆய்வுகள் வரை மேற்கொள்ளப்படும் என்ற முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க தமிழ்நாடு சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டது.*

*அதன்படி தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சி மன்றம் மீளுருவாக்கம் செய்யப்பட்டும், 20 நபர்களுக்கு ஆராய்ச்சி உதவித் தொகை வழங்கப்பட்டு வரலாற்று ஆய்வுகள் மேற்கொள்ளவும் ஆணைகள் வெளியிடப்பட்டன.*

*தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தின் அரிய ஆவணங்களை ஆராய்ந்து தமிழ் நாட்டின் பெருமைமிகு வரலாற்றினை வெளிகொண்டு வரும் வகையிலான ஆராய்ச்சியை ஓராண்டுக்கு மாதம் ரூ. 50,000 ஆராய்ச்சி உதவித் தொகையுடன் மேற்கொள்வதற்கு முதுகலை பட்டதாரிகள் அல்லது தனிநபர் ஆராய்ச்சியாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் நேற்று முன்தினம் (17.11.2025) முதல் பெறப்படும்.*

*இதற்கான விண்ணப்பப் படிவம், தகுதி மற்றும் பிற விவரங்கள் அனைத்தும் www.tamilnaduarchives.tn.gov.in என்கிற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. தகுதியுள்ள ஆராய்ச்சியாளர்கள் தங்களது விண்ணப்பங்களை இணையவழியில் மேற்குறிப்பிட்ட இணையதளத்தில் 28.11.2025 வரை விண்ணப்பித்து பயன்பெருமாறு கேட்டுக்கொள்கிறேன். விண்ணப்பங்கள் இணையவழி மட்டுமே பெறப்படும்.*

*இவ்வாறு உயர்கல்வித் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.*

# செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து 1200 கன அடி உபரிநீர் திறப்பு!

*சென்னை, நவ.19-*

*கனமழை முன்னெச்சரிக்கை காரணமாக, செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து, கூடுதலாக உபரி நீர் திறக்கப் பட்டுள்ளது.*

*தென்மேற்கு வங்கக் கடல் பகுதியில் நிலவும் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி காரணமாக, தமிழ்நாட்டில், சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர் ஆகிய 7 மாவட்டங்களில் மிக கனமழைக்கான ஆரஞ்சு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.*

*இதனிடையே, கனமழை முன்னெச்சரிக்கை காணமாக, சென்னைக்கு குடிநீர் வழங்கும் செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து கூடுதலாக உபரி நீர் திறக்க தமிழ்நாடு நீர்வளத்துறை உத்தரவிட்டது. ஏற்கனவே, 600 கனஅடி உபரிநீர் வெளியேற்றப்பட்டு வரும் நிலையில், கூடுதலாக கூடுதலாக 600 கனஅடி உபரி நீர் வெளியேற்ற நீர்வளத்துறை உத்தரவிட்டது.*

*இதையடுத்து, நேற்று முன்தினம் காலை 8 மணிக்கு, கூடுதலாக 600 கனஅடியுடன் மொத்தமாக ஆயிரத்து 200 கனஅடி உபரி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. 24 அடி உயரம் கொண்ட செம்பரம்பாக்கம் ஏரியின் தற்போதைய நீர்மட்டம் 21.39 அடி உயரமாக உள்ளது. ஏரியிலிருந்து, குடிநீருக்காக 165 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது.*

### கரூர் மாநகராட்சி – ஒன்றிய பகுதிகளில்

# ரூ.13.17 கோடி மதிப்பில் முடிவுற்ற திட்டப் பணிகள்!

## வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்!

கரூர்,நவ.19–

கரூர் மாநகராட்சி, ஒன்றிய பகுதிகளில் ரூ.13.17 கோடி மதிப்பில் முடிவுற்ற அரசு வளர்ச்சி திட்ட பணிகளை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்து, 11 புதிய திட்டப் பணிகளை சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி தொடங்கி வைத்தார்.

கரூர் மாநகராட்சி மற்றும் கரூர் ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் ரூ 13.17 கோடி மதிப்பீட்டில் முடிவற்ற திட்டப்பணிகளை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவருதல், 11 புதிய வளர்ச்சித் திட்டப்பணிகளை தொடங்கி வைத்தல் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல் தலைமை வகித்தார்.

முடிவடைந்த அரசு திட்ட பணிகளை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்து, புதிய திட்ட பணிகளை தொடங்கி வைத்தும் கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி பேசினார். அவர் பேசுகையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கரூர் மாவட்டத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தக்கூடிய வகையில் பல்வேறு புதிய சிறப்பு திட்டங்களை வழங்கி, ஒவ்வொரு பணிகளாக நிறைவு செய்யப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படுகின்றன.

அந்த வகையில், கரூர் கோட்டாட்சியர் அலுவலகத்திற்கு ரூ.3.90 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டிடம் அமைக்கும் பணி, அரிக்காரம்பாளையம் பெரியகோதூரில் ரூ 1.25 கோடி மதிப்பீட்டில் சமுதாய கூடம்,

திருக்காம்புலியூர் ரவுண்டானா பகுதியில் ரூ 10லட்சம் மதிப்பீட்டில் புதிய பயணியர் நிழற்கூடம், ரூ. 15லட்சம் மதிப்பீட்டில் புதிய நியாய விலைக்கடை, பெரியகுளத்துப் பாளையம் பகுதியில் ரூ. 1.50 கோடி மதிப்பீட்டில் நகர்ப்புற அரசு ஆரம்ப சுகாதார நிலையம், வாங்கப்பாளையம் மற்றும் குளத்துப்பாளையம் திறந்தவெளி கிணறு நீரில் மூழ்கி பம்புசெட்டை இயக்குதல், மேலமாயனூரில் டர்பன் மோட்டார், வாங்கல் குளத்துப்பாளையத்தில் வால்வுகள் அமைத்தல்,

கரூர் ஊராட்சி ஒன்றியம் பெரிய காளிபாளையம், நெரூர் வடபாகம் ஊராட்சியில் கால்நடை மருந்தக கட்டடம் ரூ. 65.லட்சம் மதிப்பீட்டில் கட்டும் பணி, நெரூர் தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து செங்குத்து பம்புசெட் மோட்டார் உபகரணங்கள் வழங்கல், சோதனை செய்தல் மற்றும் இயக்குதல் பணி ரூ. 97.50லட்சம் மதிப்பீட்டிலும், நெரூர் தலைமை நீரேற்று நிலையம் மற்றும் பாலம் மாள்புரம் சம்ப் மோட்டார், அலுமினிய கேபின் ஸ்டார் உபகரணங்கள் அமைத்தல் மற்றும் இயக்குதல் பணி ரூ.97லட்சம் மதிப்பீட்டில்,

நெரூர் தலைமை நீரேற்று நிலையம் மற்றும் பாலம்மாள்புரம் சம்ப் மோட்டார் பொருத்துதல் மற்றும் சோதனை செய்து பம்புசெட் இயக்குதல், சோதனை செய்தல் பணி ரூ. 33.லட்சம் மதிப்பீட்டிலும், பாலம்மாள்புரம் ஐந்துரோடு பகுதியில் 8.லட்சம் மதிப்பீட்டில் புதிதாக பயணியர் நிழற்கூடம் அமைக்கும் பணியினையும் 11 புதிய வளர்ச்சித் திட்டப்பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் கரூர் மாநகராட்சி மண்டலம் 1க்குட்பட்ட அரிக்காரம்பாளையம் தெற்கு தெருவில் சின்டெக்ஸ் டேங்க், மண்டலம் 2க்குட்பட்ட வாங்கப்பாளையம் நீரூந்து நிலையங்களில் குளோரினேசன் ஆலை எரிவாயு விநியோகம் மற்றும் அமைக்கும் பணி, சங்கர், காயத்ரி நகர் பகுதியில் சின்டெக்ஸ் டேங்க் பணி,

மண்டலம் 1க்குட்பட்ட வாங்கப்பாளையம் வாங்கல் தலைமை நீரேற்று நிலையத்தில் புதிய ரேடியல் ஆம்ஸ், மோட்டார் மற்றும் பம்புசெட் உபகரணங்கள் விநியோகம் மற்றும் சோதனை செய்து இயக்குதல் பணி ரூ 2.44 கோடி மதிப்பீட்டிலும் என 4 முடிவுற்ற வளர்ச்சித் திட்டப்பணிகளை திறந்து வைக்கப்பட்டது. மொத்தம் ரூ. 13.17 கோடி மதிப்பீட்டில் 15 புதிய வளர்ச்சித் திட்டப்பணிகள் தொடங்கியும் திறந்தும் வைக்கப்பட்டுள்ளது.

இப்பணிகள் அனைத்தும் தரமாகவும் உறுதியாகவும் உரியகால அளவில் முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவருமாறு தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதென செந்தில்பாலாஜி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.மாணிக்கம் (குளித்தலை), ஆர்.இளங்கோ (அரவக்குறிச்சி), க.சிவகாமசுந்தரி (கிருஷ்ணராயபுரம்), மாநகராட்சி மேயர் வெ.கவிதா, மாவட்ட வருவாய் அலுவலர்.கு.விமல்ராஜ், துணை மேயர் ப.சரவணன், மாநகராட்சி ஆணையாளர் கே.எம் சுதா, கால்நடை பராமரிப்பு துறை இணை இயக்குநர் சாந்தி மண்டலக்குழு தலைவர்கள் எஸ்.பி.கனகராஜ், ஆர்.எஸ்.ராஜா,

அன்பரசு, சக்திவேல், வட்டாட்சியர் மோகன்ராஜ், மாமன்ற உறுப்பினர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### புதுச்சேரியில் 20—ஆம் தேதி

# தி.மு.க. மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## புதுச்சேரி மாநில கழக அமைப்பாளர் இரா. சிவா அறிவிப்பு !

*புதுச்சேரி, நவ.19-*

*புதுச்சேரி மாநில தி.மு.க. அமைப்பாளர் இரா.சிவா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*புதுச்சேரி மாநில திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிர்வாகிகள், தொகுதி செயலாளர்கள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நாளை (20.11.2025 - வியாழக்கிழமை) மாலை 05.00 மணி அளவில், புதுச்சேரி லப்போர்த் வீதியில் உள்ள*



*கழகத் தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.*

*தலைமைக் கழக ஒருங்கிணைப்பாளர், கழக கொள்கை பரப்புச் செயலாளர் எஸ்.ஜெகத்ரட்சகன், எம்.பி. தலைமையிலும், எனது முன்னிலையிலும் நடைபெறும் இக்கூட்டத்தில், புதுச்சேரி மாநில கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தொகுதி கழகச் செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.*

*பொருள்: -*

*1. துணை முதல்வர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49-வது பிறந்த நாள் விழாவை சிறப்பாக கொண்டாடுவது சம்பந்தமாக.*

*2. சிறப்பு தீவிர வாக்காளர் சீராய்வு பணிகள் குறித்தும்.*

*3. கழக ஆக்கப்பணிகள்.*

*இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.*

# தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் கூட்டம்!

## வாரியத் தலைவர் பூச்சி எஸ்.முருகன் தலைமையில் நடைபெற்றது!

*சென்னை, நவ.19-*

*சென்னை, நந்தனம், சி.ஐ.டி. நகர் வாரியத் தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் (17.11.2025) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் பூச்சி எஸ்.முருகன் தலைமையில் வீட்டு வசதி வாரியக் கூட்டம் நடைபெற்றது.*

*இக்கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், வீட்டு வசதி வாரிய மேலாண்மை இயக்குநர் (பொறுப்பு) பா.கணேசன், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் திருமதி.ஸ்ரேயா பி.சிங், நிதித்துறை துணை செயலாளர் பிரதீக் தயாள், வாரிய செயலாளர் மற்றும் பணியாளர் அலுவலர் பாலசுப்ரமணியன், மாவட்ட வருவாய் அலுவலர்கள் சைலேந்தர் (நில எடுப்பு), மருத்துவர் சுரேஷ் (திட்டங்கள்), வாரிய நிதி ஆலோசகர் தரணிபாபு, தலைமை பொறியாளர்கள் கண்ணன், சரவணன் மற்றும் வாரிய உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.*



புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் ஆலங்குடி சட்டமன்றத் தொகுதி வாக்குச்சாவடி எண்கள் (76,152,188,194,242) ஆகிய வாக்குச்சாவடிகளில் SIR சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தம் குறித்து எவ்வாறு பணிகளை மேற்கொள்வதென்று BLA2,BLC,BDA, கிளை கழக நிர்வாகிகளுக்கு இயற்கை வளங்கள் துறை அமைச்சர் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளர் எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் ஆலோசனை வழங்கினார்கள். இதில் ஒன்றிய கழக செயலாளர்கள் கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49வது பிறந்தநாளைக் கொண்டாடும் வகையில், ரூ. 49 லட்சம் மதிப்பில் மொத்த பரிசுத் தொகையுடன், 15 ம்தேதி முதல் முதல் டிசம்பர் 28 வரை, கரூர் மாவட்டத்தில், கபடி, சிலம்பம், சதுரங்கம், கைப்பந்து, இறகுப்பந்து, கால்பந்து, சைக்கிள் ரேஸ், ஸ்கேட்டிங், மராத்தான் மற்றும் கிரிக்கெட் என தொடர் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுகின்றன. கரூர் திருவள்ளுவர் மைதானத்தில் ஆண்களுக்கான சிலம்பப் போட்டியை மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்.